# விபரமடல்

2011 புரட்டாதி

## 8-ம் வகுப்பு மாணவிகளுக்கான மனித கழலை (HPV) நச்சுயிரி தடுப்புமருந்து

(இவ்விபரமடல் பல மொழிகளில் கிடைக்கும்; பார்க்கவும்:
http://www.toronto.ca/health/immunization_children/index.htm)

### மனித கழலை நச்சுயிரி (HPV) என்றால் என்ன?

- இது பரவலாகக் காணப்படும் ஒரு நச்சுயிரி. பிறப்புறுப்பில் பாலுண்ணிகளையும், மற்றும் கருப்பைமுகை, யோனியுறை, யோனிமடல் (யோனியுறையைச் சுழ்ந்த பகுதி), ஆண்குறி, குதம், தலை, கழுத்து என்பவற்றில் புற்றுநோயையும் இது உண்டாக்கும்.

### மனித கழலை நச்சுயிரிக்கும், கருப்பைமுகைப் புற்றுநோய்க்கும் /பிறப்புறுப்பில் பாலுண்ணிகளுக்கும் என்ன தொடர்பு?

- சிலரைப் பீடிக்கும் மனித கழலை நச்சுயிரி, புற்றுநோய்க்கு அல்லது பாலுண்ணிகளுக்கு இட்டுச் செல்லக்கூடும். கனடாவில் ஏற்படும் கருப்பைமுகைப் புற்றுநோய்களுள் அநேகமாக அனைத்துக்கும் மனித கழலை நச்சுயிரியே காரணம்.
- கனடாவில் 70% கருப்பைமுகைப் புற்று நோய்களுக்கு இருவகை மனித கழலை நச்சுயிரிகளும், 90% பிறப்புறுப்பில் பாலுண்ணிகளுக்கு வேறு இருவகை நச்சுயிரிகளும் காரணம்.

### மனித கழலை நச்சுயிரி எவ்வாறு பரவுகிறது?

- இந்நச்சுயிரி பீடித்த துணைவருடன் உடலுறவு கொள்ளும்பொழுது தோலோடு தோல் தொடர்புறுவதால் இது பெரிதும் பரவுவது வழக்கம்.
- சிலரில் என்றுமே அறிகுறிகள் தென்படுவதில்லை. எனினும் இந்நச்சுயிரியை அவர்கள் காவித் திரிவார்கள். அவர்களிடமிருந்து அவர்களுடன் உடலுறவு கொள்ளும் துணைவருக்கு (துணைவர்களுக்கு) அது தொற்றலாம்.

### மனித கழலை நச்சுயிரி நோயின் அறிகுறிகள் எவை?

- அநேகரில் மனித கழலை பீடித்த அறிகுறிகள் எவையும் தென்படுவதில்லை. அது பீடித்துப் பல மாதங்கள் கழிந்த பின்னரும் அறிகுறிகள் தென்படக்கூடும்.
- இந்நச்சுயிரியால் பிறப்புறுப்பில் உண்டாகும் பாலுண்ணிகள் பொதுவாக வேதனை தருவதில்லை. எனினும் அவை சொறிவை உண்டாக்கி, இடர்ப்படுத்தக் கூடும். பெரும்பாலும் சிறிய பூக்கோசு போன்றும் அவை தோன்றக்கூடும்.
- பெண்களின் யோனிமடல் (யோனி இதழ்கள்), கருப்பைமுகை (கருப்பை வாயில்), குதம், தொடை, வாய் என்பவற்றில் பாலுண்ணிகள் பீடிக்கக்கூடும்.
- ஆண்களின் குறி, விதைப்பை, தொடை, குதம், வாய் என்பவற்றில் பாலுண்ணிகள் பீடிக்கக்கூடும்.

### மனித கழலை நச்சுயிரி பீடிப்பது எவ்வாறு கண்டறியப்படுகிறது?

- பெண்களின் கருப்பைமுகையில் பீடிக்கும் மனித கழலை நச்சுயிரி ஏற்படுத்தும் மாற்றங்களை கருப்பைமுகைக்கலப் பரிசோதனை (pap test) மூலம் கண்டறிய முடியும். ஆண்களின்/பெண்களின் தோலையும், பிறுப்புறுப்பையும் பரிசோதித்து பாலுண்ணிகள் பீடித்துள்ளனவா என்று கண்டறிய முடியும்.

### மனித கழலை நச்சுயிரி நோய்க்குச் சிகிச்சையளிக்க முடியுமா?

- உடல்நலம் வாய்ந்தவர்களைப் பீடிக்கும் நச்சுயிரிநோய் வகைகள் புற்றுநோயாக விருத்தியடையாமல் தாமாகவே அகல்வதுண்டு.
- கருப்பைமுகையில் உண்டாகும் பாலுண்ணிகளும் மாற்றங்களும் அகலாவிட்டால், வேதிவகைகள், நைதரச நீர்மம், பாய்ச்சொளி (laser), அறுவை வைத்தியம் எதையும் கொண்டு சிகிச்சை அளிக்கலாம். எனினும் உங்கள் உடலில் பீடித்த நச்சுயிரிகளை சிகிச்சைகளால் அகற்ற முடியாது. இந்நச்சுயிரி நோய்க்குப் பரிகாரம் இல்லை. எனவே பாலுண்ணிகள் திரும்பத் திரும்ப உண்டாகலாம்.
- மனித கழலை நச்சுயிரி நோய்க்குச் சிகிச்சையளிப்பதில் பற்றுயிரி-ஒடுக்கிகள் (antibiotics) பயனளிக்க மாட்டா.

**மனித கழலை நச்சுயிரி பரவிப் பீடிப்பதை என்னால் எவ்வாறு குறைக்க முடியும்?**

- தடுப்பூசி ஏற்றுவிக்கவும். 8-ம் வகுப்பு மாணவிகளுக்கு விதந்துரைக்கப்படும் தடுப்பூசி, பெரும்பாலான கருப்பைமுகைப் புற்று நோய்களையும், பிறப்புறுப்பில் பாலுண்ணிகளையும் உண்டாக்கும் நால்வகை மனித கழலை நச்சயிரிகள் பீடிப்பதைத் தடுக்கிறது.
- இந்நச்சுயிரி பீடித்த ஒருவருடன் உடலுறவு கொள்வதைத் தவிர்க்கவும். தோலுக்கும் தோலுக்கும் இடையே நெருக்கமான தொடர்பு ஏற்படும் எல்லா வேளைகளிலும் மனித கழலை நச்சுயிரி பீடிக்கும் சாத்தியம் ஓரளவு உண்டு.

**மனித கழலை நச்சுயிரி பீடிக்காவாறு தடுக்க முடியுமா?**

- தற்பொழுது Gardasil® எனப்படும் தடுப்பூசி கிடைக்கிறது. பெரும்பாலான கருப்பைமுகைப் புற்றுநோய்களையும், பிறப்புறுப்பில் பாலுண்ணிகளையும் உண்டாக்கும் நால்வகை மனித கழலை நச்சயிரிகள் பீடிப்பதை அது தடுக்கிறது.

**இத்தடுப்பூசி பாதுகாப்பானதா?**

- ஆம், இது பாதுகாப்பானது என்பது ஆய்வுகள் மூலம் புலப்படுகிறது. இத்தடுப்பூசியைப் பயன்படுத்தும் கனடா உட்பட்ட நாடுகள் இதன் பாதுகாப்புத் திறனைத் தொடர்ந்து உற்றுநோக்கி வருகின்றன. கடுமையான பக்கவிளைவுகள் ஏற்படல் அரிது.

**மனித கழலை நச்சுயிரிக்கான Gardasil® தடுப்பூசியை யார் ஏற்ற வேண்டும்?**

- 9 வயதுக்கும் 26 வயதுக்கும் இடைப்பட்ட பெண்களுக்கு Gardasil® விதந்துரைக்கப்படுகிறது. 8-ம் வகுப்பு மாணவிகளுக்கு இத்தடுப்பூசி இலவசம்.
- 9 வயதுக்கும் 26 வயதுக்கும் இடைப்பட்ட ஆண்களுக்கும் இத்தடுப்பூசி அங்கீகரிக்கப் பட்டுள்ளது (ஆனால் இலவசமாகக் கிடைக்காது).
- எத்தகைய உடலுறவும் ஏற்பட முன்னர் இத்தடுப்பூசி ஏற்றப்பட்டால், மிகுந்த பயன் கிடைக்கும்.

**இத்தடுப்பூசி ஏற்றுவதால் ஏற்படக்கூடிய பக்க விளைவுகள் எவை?**

- மிகவும் பரவலான பக்க விளைவுகள்: தடுப்புசி ஏற்றிய இடம் நோகும், வீங்கும், சொறியும், சிவக்கும்.
- தலைவலி, காய்ச்சல், குமட்டல், கிறுதி ஏற்படலாம். சற்றுக் குறைந்தளவு வேறு பக்க விளைவுகள்: தொண்டைத் துடிப்புகள், வாந்தி, வயிற்றுப்போக்கு, உயர் குருதி அழுத்தம், யோனிக் குருதிப்போக்கு, தடுப்பூசி ஏற்றிய இடத்தில் குறைந்தளவு கை அசைவு.
- கடும் ஒவ்வாமை விளைவுகள் (allergic reactions) ஏற்படல் அரிது. தோற்படை(hives), மூச்சிரைவு, மூச்சுவிடச் சிரமம் ஏற்பட்டால், உடன் மருத்துவ சிகிச்சை நாடவும்.

**யார் மனித கழலை நச்சுயிரி தடுப்பூசி ஏற்றக் கூடாது?**

- எவருக்காவது ஏற்கெனவே Gardasil® தடுப்பூசி ஏற்றிய பொழுது ஒவ்வாமை விளைவு (allergic reaction) ஏற்பட்டிருந்தால், அல்லது மதுவம் (yeast), அலுமினியம், polysorbate 80, L-histidine, sodium borate எதுவும் ஒவ்வாது என்றால், இத்தடுப்பூசியை ஏற்றக் கூடாது.
- இத்தடுப்பூசியை ஒன்பது வயதுக்கு உட்பட்ட சிறுமியருக்கோ கர்ப்பிணிகளுக்கோ ஏற்றிப் பரிசோதிக்கவில்லை.

**நான் எத்தனை தடவைகள் தடுப்பூசி ஏற்ற வேண்டும்?**

- மூன்று தடவைகள் ஏற்றினால், ஆகக்குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்காவது முழுப் பாதுகாப்புக் கிடைக்கும் என்பது ஆய்வுகள் மூலம் புலப்பட்டுள்ளது.



- ஆறுமாத காலப்பகுதிக்குள் தடுப்பூசிகள் ஏற்ற வேண்டும்.
- முதலாவது தடுப்பூசி ஏற்றி ஆகக்குறைந்தது ஒரு மாதம் கழித்து இரண்டாவது தடுப்பூசியும், பொதுவாக முதலாவது தடுப்பூசி ஏற்றி ஆகக்குறைந்தது ஆறு மாதங்கள் கழித்து மூன்றாவது தடுப்பூசியும் ஏற்றப்படுகிறது.

**நான் எவ்வாறு தடுப்பூசி ஏற்றலாம்?**

- பாடசாலை சார்ந்த சிகிச்சைக் களங்களிலும் நகரசமூக நிலையங்களிலும் 8-ம் வகுப்பு மாணவிகளுக்கு மனித கழலை நச்சுயிரிக்கான தடுப்பூசியை ரொறன்ரோ பொது சுகாதாரத் துறை இலவசமாக ஏற்ற முன்வந்துள்ளது.
- 8-ம் வகுப்பில் ஆகக்குறைந்தது ஒரு தடவையாவது மனித கழலை நச்சுயிரிக்கான தடுப்பூசி ஏற்றிய 9-ம் வகுப்பு மாணவிகள் எஞ்சிய தடுப்பூசிகளை எமது நகரசமூக நிலையங்களில் இலவசமாக ஏற்றலாம்.
- வேறெவராவது தடுப்பூசி ஏற்ற விரும்பினால் கட்டணம் செலுத்த வேண்டும். மூன்று தடவைகளும் தடுப்பூசி ஏற்றுவதற்கான மொத்தக் கட்டணம் ஏறத்தாழ $500. மேலதிக விபரங்களுக்கு, உங்கள் சுகாதார பராமரிப்பு வழங்குநருடன் தொடர்புகொள்ளவும். சில சுகாதாரக் காப்புறுதித் திட்டங்களில் இதற்கான கட்டணம் செலுத்த ஏற்பாடு இருக்கலாம்.

**இத்தடுப்பூசி ஏற்றும் பெண்கள் கருப்பைமுகைப் புற்றுநோய் தொடர்பான கருப்பைமுகைக்கல பரிசோதனை செய்ய வேண்டுமா?**

- ஆம். உடலுறவில் ஈடுபடும் பெண்கள் தடுப்பூசி ஏற்றும் அதேவேளை கருப்பைமுகைக்கல பரிசோதனையும் செய்ய வேண்டும்.
- கருப்பைமுகைப் புற்றுநோயை உண்டாக்கவல்ல இருவகை மனித கழலை நச்சுயிரிகள் பீடிக்காவாறு இத்தடுப்பூசி பாதுகாக்கிறது.
- இத்தடுப்பூசி ஏற்றிய பெண்களை, புற்றுநோய் உண்டாக்கவல்ல வேறு அரிதான வகைப்பட்ட மனித கழலை நச்சுயிரி பீடிக்கக்கூடும்.

**மேலதிக விபரங்களை நான் எங்கே பெற்றுக் கொள்ளலாம்?**

- உங்கள் மருத்துவருடன் அல்லது சுகாதார பராமரிப்பாளருடன் தொடர்புகொள்ளவும், அல்லது எமது இணையத்தளத்தை நாடவும்: www.toronto.ca/health அல்லது ரொறன்ரோ பொது சுகாதாரத் துறையின் தகவல் இணைப்பை அழைக்கவும்: 416-392-1250.